பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 19] சென்னை: மார்கழி 7 (22—12—71) புதன் வெளியீடு: மார்கழி 8 (23—12—71) வியாழன் [இதழ்: 159

பம்பாய் வாசிகட்கு அடையாள அட்டை

பம்பாய், டிச. 22—

பம்பாய் நகர குடிமக்களுக்கு அடையாளக் கார்டுகள் வழங்கப்போவதாகப் போலீசுக் கமிஷனர் அறிவித்திருக்கிறார்.

"சமூக விரோதச் செயல்கள் கள் நடைபெறும்போது அவரவரை அடையாளம் கண்டு கொள்ள இந்தக் கார்டுகள் உதவும்" என்று அவர் கூறினார்.

பெயர் -- வயது -- உடல் அடையாளங்கள் -- குடியிருப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

பொருளாதார வளர்ச்சிக்குப் புதிய திட்டம்

வெளிநாடுகளை எதிர்பார்த்திருக்கும் நிலை மாறும்

வெளிநாட்டுக் கொள்கைகளையும் மறு ஆய்வு செய்ய நடவடிக்கை

தலைமையமைச்சர் இந்திரா காந்தி அறிவிப்பு

புதுடில்லி, டிச. 22—

எல்லைப் பகுதிகளில் போர் நிறுத்தம் ஏற்பட்டிருப்பதையொட்டி, அடுத்து, போரில் ஏற்பட்ட பொருளாதாரச் சுமையைச் சமாளிப்பது குறித்து அரசு விரிவாகப் பரிசீலித்து வருகிறது.

இது குறித்து நேற்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி திட்டக் குழுக் கூட்டத்திலும், நிதித் துறை அதிகாரிகளிடத்திலும் வற்புறுத்தியிருக்கிறார்.

அண்மையில் ஏற்பட்ட அனுபவங்களிலிருந்து, இனிமேல் வெளிநாட்டு உதவிகளை அதிகமாக நம்புவது கூடாது என்ற உண்மையை இந்தியா நன்றாக உணர்ந்துகொண்டது; எனவே கூடிய வரையில், உள்நாட்டு வசதிகளை நம்பியே திட்டமிடப்பட வேண்டும் என்று கருதப்படுகிறது.

இந்தியப் பொருளாதாரத்தை மேம்பாடு செய்வது மட்டுமல்லாமல், வங்க தேசத்துக்கு உதவி செய்ய வேண்டியதையும் இந்தியா தனது பொறுப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது; ஒன்றோடொன்று ஒத்துழைத்தால் இரு நாடுகளும் பயன் பெற முடியும் என்று எடுத்துக்காட்டப்படுகிறது; உதாரணமாக வங்க தேசத்துக்குத் தேவையான நிலக்கரியை இந்தியா வழங்கலாம்; வங்க தேச நீர்வழிப் போக்குவரத்தைப் பயன்படுத்தி, மேற்கு வங்க -- அசாம் போக்குவரத்துச் செலவைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

ஆகவே, பொருளாதார அமைப்பில் மேலும் பல பெரிய மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்று கருதப்படுகிறது.

இப்போதைய லைசென்சு வழங்கும் முறை -- ஏகபோகத் தொழில் முறைக் கட்டுப்பாடு -- மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகள் எல்லாம் ஓரளவு தளர்த்தப்படலாம்.

மாநிலங்களில் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பே இந்தப் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். இன்னமும், 'பொருளாதார வளர்ச்சியின்மைக்கு வங்க தேசப் பிரச்சினையே காரணம்' என்று நீண்ட நாளைக்குச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை ஓரளவுக்காவது நிறைவேற்றியே தீர வேண்டுமென்று ஆளுங்கட்சி உறுதியாக நினைக்கிறது.

'நமது வெளிநாட்டுக் கொள்கையிலும் தகுந்த மாற்றங்கள் செய்வது குறித்தும் யோசிக்க வேண்டும்" என்று தலைமையமைச்சர் கருதுவதாகத் தெரிகிறது.

இந்தியா பாகிஸ்தானை அழிக்க முனைந்திருக்கிறது என்று சீன — அமெரிக்க அரசுகளால் நடத்தப்பட்ட தவறான பிரச்சாரத்தை, கிழக்கு வங்கத்தில் நமது குறிக்கோளை அடைந்ததும் மேற்கில் தன்னிச்சையாகவே போரை நிறுத்தி இந்தியா பொய்ப்பித்துவிட்டது; ஆயினும், ஐ. நா. அவையில் இந்தியாவுக்கு விரோதமான தீர்மானத்தை 104 நாடுகள் ஆதரித்ததையும் இந்தியா உணர்ந்திருக்கிறது; இவைகளில் பல நாடுகளும், 'உடனடியாகப் போர் நிற்கவேண்டும்' என்ற விருப்பம் காரணமாகவே இத்தீர்மானத்தை ஆதரித்தன; ஆயினும், இந்நாடுகளிடம் தனது கொள்கையை விளக்கிக்கூற இந்தியா நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் கண் திறக்குமா?

அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் அமெரிக்கா நடந்துகொண்ட முறை, அதன் மதிப்பை இந்தியாவிலும், வங்க தேசத்திலும் மட்டுமல்ல -- பாகிஸ்தானிலும் குறைத்துவிட்டது என்பதை மறுக்க முடியாது.

இதுவரையிலும் அமெரிக்காவின் ஆதரவு யாகியா கானிடம் தான் இருந்திருக்கிறதே தவிர, அதன் மக்களிடம் இருந்ததில்லை; இனிமேலாவது பூட்டோவைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்காமல் உண்மை நிலையை அமெரிக்கா உணரக்கூடும் என்று இந்தியா கருதுகிறது; ஆகவே இந்த நேரத்திலாவது முஜிபுர் ரகிமானை விடுதலை செய்ய பூட்டோவை இணங்கச் செய்தால், அது, அமெரிக்காவின் சிறந்த நடவடிக்கையாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

சீனாவின் வலையில் பூட்டோ சிக்காமல் இருக்க...

இப்போதுகூட பூட்டோ போர் முழக்கத்துடனேயே பேசி வருகிறார்; அவர், சீனாவுக்கு வேறு போகப் போகிறாராம்; சீனாவுக்குச் சென்று அதன் வலையில் முழுக்க முழுக்க விழுவதற்கு முன்னரே அமெரிக்கா, நிலைமையை உணர்ந்து செயல்படுமா என்று அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

வங்காள தேசத் துரோகிக்குப் பாகிஸ்தானில் பதவியாம்

துணை அதிபர் பதவி வழங்க பூட்டோ முடிவு

இராவல்பிண்டி, டிச. 22—

பாகிஸ்தான் சனநாயகக் கூட்சித் தலைவரான நூருல் அமீன், துணை அதிபராக நியமிக்கப்படவிருப்பதாக பாகிஸ்தான் அதிபர் பூட்டோ அறிவித்தார். அதிபரின் கோரிக்கையின் பேரில் பதவியேற்க நூருல் அமீன் ஒப்புதல் அளித்துவிட்டாராம்.

துணை அதிபருக்கு என்னென்ன அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன வென்று உடனடியாகத் தெரியவில்லை.

பயங்கர ஆயுதங்கள் வைத்திருக்கத்தடை

கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் நடவடிக்கை

தஞ்சை, டிச. 22—

கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில், நாகப்பட்டினம் -- நன்னிலம் -- சீர்காழி -- திருத்துறைப்பூண்டி -- மன்னார்குடி -- மாயூரம் ஆகிய வட்டங்களில வேல் கம்பு அல்லது ஈட்டிபாலா, சுளுக்கிமடுவு, சூரக்கத்தி, அரிவாள், பிச்சுவா போன்ற ஆயுதங்களை வாங்குவதற்கும் -- வைத்திருப்பதற்கும், எடுத்துச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசு விதித்துள்ள இந்தத் தடை 1972 பிப்ரவரி 15-ம் நாள்வரை நடப்பில் இருக்கும்.

"எந்தப் பொது இடத்திலும் 5-பேருக்குமேல் கூடுகின்ற நபர்களுக்கு இது பொருந்தும்" என்று அரசின் அறிவிப்புக் கூறுகிறது.

கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் அறுவடைக் காலங்களில் சட்ட -- ஒழுங்குப் பிரச்சினை தலைதூக்குவதைக் கருதி, ஆயுதங்கள் வைத்திருக்கத் தடை விதிக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிகள் இந்தியா செல்ல தடை

பாகிஸ்தானிகள் வெளிநாடு பயணம் மேற்கொள்ள முக்கியமாக இந்தியாவுக்குச் செல்ல அதிபர் பூட்டோ தடை விதித்தார்.

"அலுவல் காரணமாக வெளிநாடு செல்லும் அரசு அதிகாரிகளுக்கு இந்தத் தடையுத்தரவு பொருந்தாதாம்."

எனினும் அவர்கள், குறைந்த வகுப்பில் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்களாம்.

யாகியா கானின் உத்தரவுகள் ரத்து

இராணுவ நீதிமன்றங்களில், மாணவர்கள் -- தொழிலாளர்கள் குடியானவர்கள் மீதுள்ள வழக்குகளை திரும்பப் பெறுமாறு பூட்டோ உத்தரவிட்டார்.

மரண தண்டனையை ஆயுள் காலத் தண்டனையாக மாற்றும்படி உத்தரவிட்டார்.

இலஞ்ச ஊழல் போன்ற புகார்களுக்காகக் கசையடித் தண்டனையை முன்னாள் அதிபர் யாகியா கான் செயல்படுத்தியிருந்தார்; இதையும் ரத்து செய்யும்படி உத்தரவிட்டார்.

பூட்டோவின் புதிய உத்தரவு

புதுடில்லி, டிச. 22—

"பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, எவ்வித ஊதியமும் வாங்கமாட்டார்" என்று இஸ்லாமாபாதில் உள்ள அதிகாரி கூறியதாக பாகிஸ்தான் வானொலி மேற்கோள் காட்டியது.

"அமைச்சர்கள் -- கவர்னர்கள் -- அதிகாரிகள் ஆகியோர் அரசாங்க அலுவலில் போகும்போது விமானத்தில் குறைந்த வகுப்பிலேயே பிரயாணம் செய்ய வேண்டும்" என்று பூட்டோ உத்தரவிட்டிருக்கிறாராம்.

டிசம்பர் 26: வங்கதேச விடுதலை விழா

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அறிக்கை

சென்னை, டிச. 22—

"தங்கள் உரிமைக்காகவும் — மக்களின் முடிவினைச் செயலாற்றிடவும் முழு மூச்சுடன் போராடி வெற்றி பெற்ற வங்க தேச மக்களுக்கு நமது நல்வாழ்த்தினை அளித்திடவும், அவர்கள் பெற்ற விடுதலையைப் பாராட்டிடவும், வங்க தேச விடுதலை விழா' தமிழ்நாடெங்கும் இம்மாதம் 26-ம் நாள் நடைபெற இருக்கிறது.

"அயராது போராடிய நமது வீரர்களுக்கு வணக்கம் செலுத்தவும், இன்னும் நமது தாய்த் திருநாட்டின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளவேண்டிய பணிகளை உள்ளத்தில் கொள்ளவும் இவ்விழாவினை, 'இந்தியப் பாதுகாப்பு நாள்' ஆகவும் கொண்டாடிட வேண்டுகிறேன்.

"சென்னை மாநகரில் இவ்விழா, கடற்கரையிலுள்ள சீரணி அரங்கில் — சென்னை நகர மேயர் திருமதி காமாட்சி செயராமன் தலைமையில் 26-12-71 மாலை 5-மணியளவில் தொடங்கும்; பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்; பின்னர், இசை நிகழ்ச்சி ஒன்றும் நடைபெறும்.

"இவ்விழாவில் பங்குகொள்ளுவதைத் தமது தேசீயக் கடமையாக ஒவ்வொருவரும் கருதி, நகரில் வாழும் மக்களனைவரும் பெரும் திரளாகக் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

"வணிகப் பெருமக்கள் — அலுவலகங்களில் பணியாற்றுவோர் — ஆசிரியப் பெருமக்கள் — மாணவர்கள் — தாய்மார்கள் — தொழிலாளத் தோழர்கள் அனைவரும், 'இந்திய நாட்டின் பாதுகாப்புக்குத் தமிழ் மக்கள்தம் ஆதரவு ஒருமுகமாக என்றும் இருந்திடும்' என்பதனை எடுத்துக் காட்டும் வகையில் பெருந்திரளாக வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்."

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

பூட்டோவின் புதுக் 'கரடி'

கிழக்குப் பாகிஸ்தானை மீட்க முஜிபருடன் சந்திப்பாம்

இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த நிபந்தனை விதிக்கிறார்

இராவல்பிண்டி, டிச. 22—
பாகிஸ்தானின் புதிய அதிபர் பூட்டோ, 'கிழக்குப் பாகிஸ்தானை' மீண்டும் பெறுவதென முடிவு செய்திருப்பதாகவும், இது குறித்து சிறையில் இருக்கும் முஜிபுர் ரகிமானுடன் பேசப்போவதாகவும் அறிவித்துள்ளார்; ஆனால் இதற்குக் காலம் நிர்ணயிக்க இயலாது என்பதை அவர் உணர்ந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர், தாம் இந்தியாவுடன் கலந்து பேசுவதற்கு ஒப்புக்கொள்வதாகக் கூறினர்; ஆனல் அதற்குமுன் இந்தியர்கள், 'கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேற வேண்டும்' என்ற நிபந்தனையையும் அவர் விதித்திருக்கிறார்.

"கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியர்கள் வெளியேறுவதுடன், காஷ்மீர் குறித்தும் ஒரு முடிவெடுக்கப்பட வேண்டும்" என்று பூட்டோ வற்புறுத்தியிருக்கிறார்.

"எனது நாட்டின் பகுதி சரிபாதிக்குமேல் வெளிநாட்டு ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறது; அதை நாங்கள் விட்டுவிடப்போவதில்லை; நிச்சயமாக அதனை மீட்போம்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் மேற்கு வங்காளத்தை, 'ஒரு சேரி' என்று அவர் வர்ணித்தார்; 'அந்தச் சேரியில் இணைந்துகொள்வதற்கு 'என்னுடைய வங்காள'த்தை (வங்க தேசத்தை) நான் அனுமதிக்க மாட்டேன்' என்றும் அவர் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

உயிர் துறப்பதே மேல்!

"இந்தியாவுக்கும்-- பாகிஸ்தானுக்கும் இடையில் நிலையான தீர்வு காண்பதற்காகச் சமத்துவம்—நீதி அடிப்படையில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார்; ஆனல், 'படை பலத்தைக்கொண்டு திணிக்கப்படும் முடிவைவிட உயிர் துறப்பதே மேலானதாகும்' என்பேன்.

தவறு செய்தது உண்மையே!

இப்போது மிகவும் முக்கியமான வேலை, கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள நமது சகோதரர்களுடன்—அதாவது, கிழக்குப் பாகிஸ்தானின் உண்மையான தலைவர்களுடன்--பேச்சுவார்த்தை நடத்துவதேயாகும்; கிழக்குப் பாகிஸ்தான் என்றைக்கும் பாகிஸ்தான் பகுதியாகவே இருந்துவரும்; நாங்கள் தவறுகள் செய்துள்ளோம்; ஆனல் அதற்காக நம்மைப் பிரிக்க வேண்டுமென்று அர்த்தமில்லை.

காரணமற்றுப் புலம்புகிறார்

இந்தியாவுடன் நல்ல முறையில் வாழ வேண்டுமென்றுதான் விரும்புகிறேன்; ஆனல் அவர்களுடன் கௌரவமான—நியாயமான பேச்சுவார்த்தை நடத்துவதற்குமுன், இந்தியா பாகிஸ்தானிலிருந்து வெளியேற வேண்டும்.

பழிக்குப் பழி வாங்குமாம்

இந்தியா பழி வாங்கும் வழியில் புகுந்தால், பாகிஸ்தானும் பழிக்குப் பழி வாங்கும்.

எனது படைகளுக்கு ஆயுதங்களும்—டாங்கிகளும் வேண்டும்; ஆகவே, வெளிநாடுகளிலுள்ள பணத்தையெல்லாம் திருப்பிக் கொண்டுவர வேண்டுமெனப் பாகிஸ்தான் மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

பரிசிலனை செய்வாராம்

"இந்தியாவுடன் அரசியல் உறவுத் துறைகள் வாயிலாக இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்வருவாரா?" என்று கேட்டதற்கு, 'இது பற்றிப் பரிசிலிக்கப்படுகிறது' என்று தெரிவித்தார்.

"சென்ற ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய சட்டமன்றத்தை விரைவில் கூட்டும் எண்ணமில்லை' என்று கூறினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அமுதம் அச்சகத்தில் (34, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

'முஜிபுர் ரகிமானை சந்திக்க முடியவில்லை'

'மக்கள் விருப்பத்தைக் கருத்தில் கொள்வேன்'

அதிபர் பூட்டோ கூற்று

இராவல்பிண்டி, டிச 22—
"ஷேக் முஜிபுர் ரகிமான் உயிருடன் --- உடல் நலத்துடன் இருக்கிறார்; ஆனல், அவரை என்னல் சந்திக்க முடியவில்லை"

என்று பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, செய்தியாளர்கள் கூட்டத்தில் கூறினர்.

"முஜிபுர் ரகிமான் எப்போது விடுதலை செய்யப்படுவார்?" என்று கேட்டபோது, 'மக்களின் விருப்பம் கருத்தில் கொள்ளப்படும்' என்று கூறினர்.

"முஜிபுர் ரகிமானை விடுதலை செய்வதைப் பற்றி முடிவு செய்வதற்குமுன், என் மக்களுடன் நான் பேசவேண்டும்; மேற்குப் பாகிஸ்தானில் அவருக்கு அவ்வளவு நல்ல பெயர் கிடையாது என்பது உங்களுக்குத் தெரியும்" என்று கூறினர்.

"முன்னுள் அதிபர் யாகியா கான், பாகிஸ்தானிலேயே இருக்கிறார்" என்று என்றார்.

கிழக்கு வங்கத்தை மீட்பராம்

கிழக்கு வங்காளத்தைப் பற்றி குறிப்பிட்டு,'நமது நாட்டில் பாதி அந்நிய ஆதிக்கத்தில் உள்ளது; ஆனல் நாம விழுந்துவிடவில்லை; அதை மீட்கப் போகிறோம்' என்று கூறினர்.

'மேற்கு வங்காளம் ஒரு சேரி' என்று கூறிவிட்டு, 'என வங்காளம் அந்த இந்தியச் சேரியில் சேராது' என்றார்.

வீட்டுக்கு வீடு போர் நடைபெறக்கூடுமாம்

'பாகிஸ்தானமீது தன் விருப்பத்தைத் திணிக்க முடியுமென்று இந்தியா நினைத்தால, பிறகு அது, வீட்டுக்கு வீடு நடக்கும் போராக இருக்கும் என்று அஞ்சுகிறேன்."

யாகியாகான் கதி என்ன?

"நாட்டுக்குத் துரோகம் செய்ததற்காக யாகியா கான்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?" என்று கேட்டதற்கு, பூட்டோ பதிலளிக்கவில்லை; ஆனல்'அவர் வீட்டுக் காவலில் இல்லை' என்று மட்டும் தெரிவித்தார்.

"நான் பதவியேற்பதற்குமுன், 'இப்போது நிலைமை நெருக்கடியாக இருக்கிறதென்றால், அதற்கு யாகியாவின் ஆட்சிக் காலத்தில் வரிசையாக இழைக்கப்பட்ட தவறுகளே காரணமாகும் என்று ஜெனரல் யாகியாவிடமே சொன்னேன்' என்று பூட்டோ தெரிவித்தார்.

"யாகியா கான், போர் நிறுத்தத்திற்கு அவசரப்பட்டு இணங்கி விட்டார்" என்று கூறினர்.

குற்றக் கூண்டில் நிறுத்தப்படுவார் யாகியா கான்

புதிய சர்வாதிகாரி பூட்டோவின் சூசகத் தகவல்

புதுடில்லி, டிச. 22—
"முன்னுள் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாகியா கான்மீது விசாரணை நடக்கக்கூடும்" என பாகிஸ்தான் புதிய அதிபர் பூட்டோ சூசகமாகக் குறிப்பிட்டதாக இஸ்லாமாபாத் நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பூட்டோ பதவியேற்றதும்,முதல் வேலையாக யாகியா கானையும், மற்ற 6 ஜெனரல்களையும் ஓய்வு பெறச் செய்தார்.

இந்தியாவின் போர் நிறுத்த யோசனையை யாகியா கான் ஏற்றதிலிருந்து அவரை எதிர்த்து மேற்குப் பாகிஸ்தான் முழுவதிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன; அவர் மீது விசாரணை நடத்தவும் கோரிக்கை எழுப்பப்பட்டது.

முஜிபுர் ரகிமான் எங்கே?

பீகிங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தகவல்

இராவல்பிண்டி டிச. 22 —
"ஷேக் முஜிபுர் ரகிமான் சிறையிலிருந்து விரைவில் விடுதலை செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்படுவார்"

என்று, பாகிஸ்தான் அதிபர் பூட்டோ அறிவித்தார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு அளித்த ஒரு வரவேற்பில் பூட்டோ பேசுகையில் மேற்கூறிய தகவலை வெளியிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"ஷேக் முஜிபுர் ரகிமான் இன்னமும் சிறையிலேயே இருக்கிறார்; அவர் விடுதலை செய்யப்பட்டு நாட்டில் ஏதாவது ஓர் இடத்தில் -- ஏதோ ஒருவித வீட்டுக் காவலில் வசிக்க அனுமதிக்கப்படுவார்."

ஷேக் முஜிபுர் எந்த இடத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளார் என்பதையும், அவ்வாறு வீட்டுக் காவலின்கீழ் எந்த இடத்தில் வசிக்க அனுமதிக்கப்படுவார் என்பதையும் வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

பிரிட்டன் தகவல்

வங்க தேசத் தலைவர் முஜிபுர் மேற்குப் பாகிஸ்தான் சிறையில் இருப்பதாக இன்று இலண்டனில் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வங்க தேசத் தலைவர் எங்கிருக்கிறார் என்பது பற்றி இசுலாமாபாத்தில் உள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனரிடம் அதிபர் பூட்டோ தெரிவித்ததாக அவ்வட்டாரங்கள் கூறின.

ஆனல், இச்செய்திக்கு முரணாகப் பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறது; 'ஈவினிங் ஸ்டாண்டர்டு' பத்திரிகை, முஜிபுர் ரகிமான் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து விமான மூலம் பீகிங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டார்' என்று கூறியிருக்கிறது.

சென்னைக்குப் புதிய ஷெரீப் -- எம்.ஏ.எம். ராமசாமி பதவியேற்பு

சென்னை, டிச. 21—
சென்னை நகர ஷெரீபாக தொழிலதிபர் எம். ஏ. எம். இராமசாமி நேற்று பதவி ஏற்றுக்கொண்டார்.

பதவி ஏற்பு விழா, கிண்டி ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது.

ஆளுநர் கே. கே. ஷா, முதலமைச்சர் கலைஞர், இதர அமைச்சர்கள், சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி கே. வீராசாமி, அரசாங்கத் தலைமைச் செயலாளர் பி. சபாநாயகம், பதவி விலகும் ஷெரீப் இரத்தினம் ஆகியோர் வந்திருந்தனர்.

புதிய ஷெரீப் இராமசாமி ஓராண்டுக் காலம் பதவி வகிப்பார்.

பம்பாய்வாசிகட்கு அடையாள..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகவரி -- சாதி ஆகிய விவரங்கள் அதில் குறிப்பிடப்பட்டிருக்குமாம்.

குழந்தைகள் உட்பட அனைவருக்கும் இக்கார்டுகள் தயாரிக்கப்படுவதுடன், எப்போதுமே இதனைக் கையில் வைத்திருக்க வேண்டுமாம்.

ஓரே நாளில் ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் குவிந்தன

தயாளு அம்மையார் தலைமையில் அமைச்சர்களின் துணைவியர்கள்

போர்வீரருக்கான பொருள்களை திரட்டிய காட்சி

சென்னை, டிச. 22—
இந்தியப் போர் வீரர்களுக்கு அனுப்புவதற்கென்று தமிழகத்தின் சார்பில் நன்கொடைப் பொருட்களை நேற்று முதலமைச்சர் கலைஞர் அவர்களின் துணைவியார் தயாளு அம்மையார் தலைமையிலான குழு ஒன்று திரட்டியது; இக்குழுவில் அமைச்சர்களின் மனைவியர்களுடன் மற்றும் பல தாய்மார்களும் கலந்துகொண்டனர்.

இக்குழுவினர், நேற்று காலை 10-30 மணியளவில சென்னை பூக்கடை காவல்நிலையத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு சைனு பஜார் நோக்கிச் சென்றனர்.

ஊர்வலத்தில் திருமதிகள் விசாலாட்சி நெடுஞ்செழியன், இராஜசுந்தரி மதியழகன், புவனேசுவரி நடராசன், டாக்டர் விலாசனி சண்முகம், திருமதி சாதிக் பாட்சா, செந்தில்வடிவு இராமன, சாரதா இராமச்சந்திரன், சிவகாமி கண்ணப்பன் ஆகியோருடன் சுலோசனு சிற்றரசு, அலமேலு அப்பாதுரை, மாநில சமூக நலக் குழுத் தலைவி சம்பாவதி வெங்கடாசலம், குப்பம்மாள், காந்திமதி அறச்செலவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சைனு பஜாரில் இந்த ஊர்வலம் நுழைந்ததும், சுமார் 150-க்கு மேற்பட்ட வியாபாரிகள் உதவிப் பொருட்களை அள்ளி அள்ளி வழங்கினர்; கைலிகள் -- ரவிக்கைகள் -- சேலைகள் -- சட்டைத் துணிகள் -- கால்சட்டைத் துணிகள் -- கம்பளி வகைகள் -- துண்டுகள் -- பனியன்கள் உட்பட சுமார் ரூ. 55,000 மதிப்புள்ள துணிகள் வழங்கப்பட்டன.

அத்துடன், டிஞ்சர் அயோடின், ஸ்டெரிலைசர் டிரம்கள், ஆகியவை மருந்துக் கடைக்காரர்களால் வழங்கப்பெற்றன.

சத்துணவு வகைகளான ஹார்லிக்ஸ் போன்றவையும் வழங்கப் பெற்றன.

சத்துணவு வகைகளான ஹார்லிக்ஸ் போன்றவையும் வழங்கப் பெற்றன.

சுமார் ரூ. 4,500 மதிப்புள்ள பீடி பண்டல்களும், ரூ. 15,000 மதிப்புள்ள டாய்லட் சாமான்களும் தனித் தனியாக வந்து குவிந்தன; இவற்றில் சோப்பு முதலிய காஸ்மடிக் சாமான்களும் இருந்தன.

பிராட்வே முனையிலுள்ள பி. வி. ஊறுகாய்க் கடையின் உரிமையாளரான முன்னுள் அமைச்சரும் தற்போதைய சட்டமன்ற உறுப்பினருமான திருமதி ஜோதி வெங்கடாசலம் ரூ. 500 மதிப்புள்ள ஊறுகாய்ப் புட்டிகளை வழங்கினர்.

சைனு பசாரில் பூக்கடையிலிருந்து தம்புச்செட்டி முனைவரையிலான கடைகளில் நேற்று பகலில் வசூல் நடந்தது.

சுமார் ஒருமணி நேரத்தில் சைனு பஜார் கடைகளில் மட்டும் ஓர் இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் குவிந்துவிட்டன.

மயிலாப்பூரில் :

இந்தக் குழுவினர் மாலை மூன்று மணியளவில், மயிலாப்பூர் லஸ் முனையில் அடுத்த நன்கொடை வசூலைத் தொடங்கினர்கள்.

லஸ் முனையிலிருந்து தொடங்கி இராயபேட்டை நெடுஞ்சாலையிலுள்ள பாட்டா கம்பெனி வரையிலான கடைகளில் வசூலிக்கப்பெற்றன.

மயிலாப்பூர் லஸ் முனை வசூலின் போது வியாபாரிகள் மட்டுமன்றி சுற்றுவட்டாரத்திலிருந்தும் பலர் வந்து குவியல் குவியலாக நன்கொடைப் பொருட்களை வழங்கினர்கள்.

தியாகராயநகரில் :

மாலை 5 மணியளவில் தியாகராய நகர் பாண்டி பஜாரில் வசூல் நடைபெற்றது; சைதை, ஆலந்தூர் போன்ற இடங்களிலிருந்தும் மற்றும் சுற்றுப்புறங்களிலிருந்தும் வியாபாரிகள் வந்து நன்கொடைப் பொருட்களை வழங்கினர்கள்.

புரசைவாக்கத்தில் :

அடுத்து, புரசைவாக்கம் கடை வீதியிலும் வசூல் தொடர்ந்து இரவு 7 மணியளவில நடைபெற்றது.

பெரம்பூர் — சூளை — எழும்பூர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இங்கு நன்கொடைப் பொருங்களை வழங்கினர்கள்.

இக்குழுவினருடன் கூடவே வந்த லாரிகளில் ஆங்காங்கே மூட்டை மூட்டையாகப் பொருட்கள் குவிந்த வண்ணமிருந்தன.

கிட்டத்தட்ட நான்கு இடங்களிலுமாக வசூலித்த நன்கொடைப் பொருட்கள் சுமார் ரூ. 2-இலட்சத்திற்கு இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்தப் பொருட்கள் இராணுவத்தினருக்கு அனுப்பிவைக்கப்பட இருக்கின்றன.